**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY BY M/S. N. MURUGAN ROUGH STONE AND GRAVEL QUARRY,S.F.NO.415/2A & 415/2B, OVER AN EXTENT OF – 0.96.50 HECTARES @ PINAYUR VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHEEPURAM DISTRICT ON 21.11.2024 @ 10.30 A.M**

| | |
|---|---|
| **Name of Project:** | Proposed Rough Stone and Gravel Quarry of **M/s. N. Murugan Rough Stone and Gravel Quarry**, S.F.No.415/2A & 415/2B, over an extent of – 0.96.50 Hectares, Pinayur Village, Uthiramerur Taluk, Kancheepuram District |
| **Venue:** | M/s. R. R. K. Mahal,<br>No.167- Thirumukoodal,<br>Thirumukoodal – Pinaiyur Road,<br>Uthiramerur Taluk, Kanchipuram District. |
| **Date and Time:** | 21.11.2024 & 10:30 A.M |
| **Participants:** | 1. Mr. K. Rama Moorthy,<br>District Revenue Officer(L.A),<br>National Highway,<br>Kanchipuram District.<br>2. Er.K.Prakash,<br>District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur,<br>Kancheepuram District.<br>3. Dr. S. Vediappan,<br>Deputy Director,<br>Department of Geology and Mining,<br>Kancheepuram. |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Kancheepuram District, other Government Officials, Publics, Social & Environmental activists for the Public Hearing and informed that the proposed stone and gravel quarry of M/s. N Murugan Rough Stone and Gravel Quarry, S.F.No.415/2A & 415/2B, over an extent of – 0.96.50 Hectares, Pinayur Village, Uthiramerur Taluk, Kancheepuram District have approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed rough stone and gravel quarry. In this regard, SEIAA-TN has

issued Terms of Reference (TOR) subject to one of the condition that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged today 21.11.2024 and public notice have been published as mandated in the Newspapers namely "Dinamalar & The New Indian Express" on 11.10.2024.

On behalf of project proponents the Project Consultant will make presentation about the said proposed projects. After that the public present here can express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs to and the same will be recorded.

The Project consultant Thiru. S. Rajkumar explained in details about the proposed project through a power point presentation.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1. | **Mr. B. Venkatesan, President, Pinayur Panchayat,** | Already, the survey numbers. 415 1A, 1B is occupied with quarry. Since the village and the proposed quarry is far away, there is no objections to the quarry. As it affects the aquatic life, the water from the quarry should not discharge into the adjacent eri and alternative disposal methods must be adopted. |
| 2. | **Mr. Meganathan, Pinayur Village,** | Since there are a lot of livestock in the community, the water in the quarry pits should not be contaminated by the upcoming quarry operations. Plant the trees Before initiating the mining process, . Provide more job opportunities to our village people. |
| 3. | **Mr. Sunondha Reddy, Environmentalist** | My best wishes to the villagers at the same time proponent. I am also congratulating the management. The mining is the government property and there is no objection to the mining. At the same time there is a very important aspect to maintain ecological balance. Before 2018, quarry operation for above 25 hectares only require public hearing. After 2018, below 5 hectares |

| | | |
|---|---|---|
| | | cluster, below 1 hectares also requires Public Hearing with this practice there is chance to take three years to four years time for starting the quarry for which the management facing problem. The government also loose the DMF, tax in 3 years. At the same time employment and proponent to wait for 3 years. In this context I request the government of india to reduce the time either three months or five months. It is very useful to the government. At the same time management to take precautionary measures to save the environment. In this mining activity the safety measures like controlled blast is very important and also water sprinkling is very important on the roads. Tarpaulins is important to cover the materials during transport. With these precautionary measures taken there is no objection for mining activity. I request the panel committee to recommend MOEF to give permission to the management. Environment and industrial development is also important. Please maintain the balance. |
| 4. | **Mr. Ezumalai, Pinayur Village** | It would be nice if the emission occurs during quarrying activities is regulated by sprinkling water to prevent dust emanation. |
| 5. | **Mr. Satish, Environmentalist.** | I welcome everyone. The government shall rectify the public issues and funds shall be sanctioned for stable growth. Job employment shall be provided. I submit that, permanent houses should be given to the people by the government. The project proponent shall plant more number of trees and save them. I request the government to approve this proposal. |
| 6. | **Mr. Devarajan, Tamil Nadu Vivasay Iyakkam, Sirudhamur Panchayat, Arunkundram.** | From starting of this meeting, we have opposed the quarrying operations. Quarrying operations began in this place from 2004, and the government has been degrading natural resources ever since. The dust emissions are making it harder for us to live. We were lived here peacefully with the natural resources. Previously, the farmers owned three or four tractors, but their |

| | | |
|---|---|---|
| | | situation is getting worse. Destroying natural resources, which are the only source for life. Please consider this for the benefit of those who live nearby. Kindly take this into account and cease quarrying in the future. I am very aware about the fact that ministers play a vital role so invite an local MLA to these public hearings. |
| 7. | **Mr. Sivakumar, Ambedkar Podhu Udaimai Munnani, Arunkundram** | Many public hearings have already been in this same place and we informed that there is no necessity for quarrying activities considering the deaths caused on by it. How can we humans possibly survive in such a situation. Numerous plantation plans were discussed but never put into practice. We don't need quarry. This area is completely ruined. Visit our village for once. Please consider the perspective of those who residing here. For many years, we have been fighting against these quarrying activities but they continue to expand, for the benefit of whom? Whether we survive or not is up to you. Lorry driver driving while on their phones. What is the benefit of quarry? Agriculture has already been destroyed and turned into a graveyard, then how the local population is supposed to live. Our condition is not good. 80% of the total area has already been damaged, we need to survive on the resources that are left. How the next generation will survive?. How can you live by damaging natural resources?. Clean air is polluted. The food and water are covered in dust. For the sake of four people, why all the village people should die?. This meeting should be stopped. It is not appropriate to hold this meeting for suggesting quarry in this location. Even After 15 years of suffering, how can we able to survive if quarrying operations keep going?. His father is dead because of quarry vehicle. The quarrying operations resulted in the deaths of several persons. Consider this matter otherwise we will oppose the upcoming election and I conclude that if quarrying activities continues we cannot live. |

| | | |
|---|---|---|
| 8. | **Mr. Ravichandran, Arumbuliyur village** | Everybody should receive a book copy of the report. We can only comprehend the issues only if we read it. The rash driving of quarry lorries is responsible for numerous fatalities. Despite the fact that numerous meetings continued to be held, we were still firmly against the quarries. Do you know how many quarries there are in Uthiramerur Taluk?, including the number of unauthorized quarries? Why is permission being granted despite our repeated opposition? Due to the dust and rash driving of Heavy trucks transporting quarried materials we were unable to go to the hospital, market, and schools. Install speed breakers wherever needed. Why permission is keep granting for stone quarry? Water from quarry pits shouldn't be released into our canal. I request that no permissions should be granted for any stone quarries |
| 9. | **Mr. Manivannan, Seethavaram village.** | Every time public hearing meeting is getting conducted, but the hearings of the public is never taken into account. Heavy quarry vehicles blocking the public transportation, which has an impact on local residents' livelihoods and children. Public hearings are conducted, but no appropriate reaction is taken. Enough of damaging natural resources. Everyone in the area is having respiratory issues. If you stop two wheelers in arunkundram village for two minutes the color of the vehicle changes immediately. Please stop this quarrying activity. Please take into account and cancel the proposed quarrying operation. |

With the above comments, no one has turned up for sharing their views and hence the public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Kancheepuram District, Officials, Public and NGO's. It was informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPCB, Sriperumbudur,**
**Kancheepuram District**

**Competent Authority/**
**District Revenue Officer (L.A),**
**National Highway, Kanchipuram**
**Kanchipuram District.**

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பினாயூர் கிராமம், புல எண். 415/2A & 415/2B –ல், 0.96.50 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள தி/ள். N. முருகன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி, சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 21.11.2024அன்று காலை 10.30 மணியளவில் தி/ள்.R.R.K மண்டபம், திருமுக்கூடல், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

பங்கேற்றோர் :

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்** | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பினாயூர் கிராமம், புல எண். 415/2A & 415/2B–ல், 0.96.50 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள **தி/ள்.N.முருகன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி** |
| **இடம்** | தி/ள். R.R.K மண்டபம், எண்.167, திருமுக்கூடல், திருமுக்கூடல்– பினையூர் சாலை, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம்.. |
| **நாள் மற்றும் நேரம்** | 21.11.2024 நேரம் காலை 10.30 மணி |
| **பங்குபெற்றோர்** | 1. திரு. இராமமூர்த்தி தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை, காஞ்சிபுரம் மாவட்டம்.<br>2. திரு. கு. பிரகாஷ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.<br>3. முனைவர் சு. வேடியப்பன், துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, காஞ்சிபுரம் மாவட்டம்<br>மற்றும் பொதுமக்கள் |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகை தந்துள்ள தனி மாவட்ட வருவாய் அலுவலர், (நி.எ), காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பிணாயூர் கிராமம், புல எண். 415/2A & 415/2B –ல், 0.96.50 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள **தி/ள். N. முருகன் சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரிக்கு** சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் 01.03.2022 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 11.10.2024 அன்று "**தினமலர்**" தமிழ் நாளிதழிலும் மற்றும் "**தி நியூ இந்நியன் எக்ஸ்பிரஸ்**" ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 21.11.2024 இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் அதனை சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்ட ஆலோசகர் **திரு.எஸ்.ராஜ்குமார்**, பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

**<u>பொதுமக்களின் கருத்துக்கள் பின்வருமாறு:</u>**

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | **வெங்கடேசன்: பினாயூர் கிராமம்** | ஏற்கனவே சர்வே எண். 415 1A,1B முழுவதும் கல்குவாரி ஆகிவிட்டது. எங்கள் ஊருக்கும் குவாரி நடைப்பெறும் இடத்திற்கும் துரம் அதிகமாக இருக்கிறது அதனால் எந்த பதிப்பும் இல்லை. குவாரியில் இருந்து வரும் தண்ணீரை மட்டும் ஏரியில் விடாமல் இருந்தால் நன்றாக இருக்கும், ஏன் என்றால் மீன் வளம் பதிப்பு அடைகிறது. ஆகையால் குவாரி தண்ணீரை வேறு இடத்தில் விட்டால் போதும் எந்த பாதிப்பும் இல்லை. |
| 2 | **திரு. மேகநாதன்: பினாயூர் கிராமம்** | எங்கள் ஊரில் இந்த குவாரி வருவதால் ஆடு, மாடு அந்த பகுதியில் மேய்கிறது, அதனால் தண்ணீரை சுத்தமாக வைத்து கொள்ளவேண்டும். மரக்கன்றுகளை குவாரி வருவதற்கு முன்பு நடவு செய்ய வேண்டும். வேலை வாய்ப்புகள் எங்கள் கிராம மக்களுக்கு அதிக அளவில் இருத்தல் வேண்டும். இதுவே, என் கோரிக்கை. நன்றி. |
| 3 | **திரு. சுனாந்தா ரெட்டி: சுற்றுச்சூழல் ஆர்வலர்** | கிராம மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். அதே நேரத்தில் நிர்வாகத்தினரையும் வாழ்த்துகிறேன். சுரங்கம் அரசு சொத்து, சுரங்கம் எடுப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. அதே சமயம் சுற்று சூழல் சமநிலையைப் பேணுவது மிக முக்கியமாக உள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கு முன், 25 ஹெக்டேருக்கு மேல் உள்ள குவாரிகளுக்கு பொது விசாரணை தேவை. 2018க்குப் பிறகு, 5 ஹெக்டேருக்குக் கீழே, 1 ஹெக்டேருக்குக் கீழே உள்ளவர்களுக்கும் பொது விசாரணை தேவை, இந்த நடைமுறையின் மூலம், நிர்வாகம் சிக்கலை எதிர்கொண்ட குவாரியைத் தொடங்க மூன்று ஆண்டுகள் முதல் நான்கு ஆண்டுகள் வரை அவகாசம் எடுக்கும் வாய்ப்பு உள்ளது. 3 ஆண்டுகளில் டி.எம்.எப்., வரியையும் அரசு இழக்கிறது. |

| | | |
|---|---|---|
| | | அதே நேரத்தில் வேலைவாய்ப்பு மற்றும் முன்மொழிபவர் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இந்தச் சூழலில் மூன்று மாதங்கள் அல்லது ஐந்து மாதங்கள் நேரத்தைக் குறைக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இது அரசுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதே சமயம் சுற்றுச்சூழலை பாதுகாக்க நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சுரங்க நடவடிக்கையில் கட்டுப்படுத்தப்பட்ட வேட்டு வெடிப்பது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் முக்கியம் மற்றும் சாலைகளில் தண்ணீர் தெளித்தல் மிகவும் முக்கியமானது. போக்குவரத்தின் போது பொருட்களை மூடுவதற்கு தார்ப்பாய்கள் முக்கியம். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் சுரங்க நடவடிக்கைக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நிர்வாகத்திற்கு அனுமதி வழங்க சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்திடம் கேட்டுக்கொள்கிறேன். சுற்றுச்சூழல் மற்றும் தொழில்துறை வளர்ச்சியும் முக்கியமானது. தயவுசெய்து சமநிலையை பராமரிக்கவும். |
| 4 | **திரு. ஏழுமலை:**<br>**பினாயூர் கிராமம்** | கல்குவாரியில் இருந்து வெளிவரும் மண்துகள் தூசிக்கு தண்ணீரை பயன்படுத்தி அதனை வெளிவராமல் செய்தால் நன்றாக இருக்கும். |
| 5 | **திரு. சதீஷ்,**<br>**சுற்றுச்சூழல் ஆர்வலர்** | அனைவருக்கும் வணக்கம். பொதுப் பிரச்சினைகளை அரசாங்கம் சரிசெய்து, நிலையான வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும். வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். மக்களுக்கு நிரந்தர வீடுகள் அரசால் வழங்கப்பட வேண்டும் என கேட்டுகொள்கிறேன். திட்ட முன்மொழிபவர் அதிக எண்ணிக்கையிலான மரங்களை நட்டு அவற்றை காப்பாற்ற வேண்டும். இந்த முன்மொழிவை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். |
| 6 | **திரு. தேவராஜன்:**<br>**(அருங்குன்றம்)**<br>**தமிழ்நாடு விவசாய இயக்கம்.** | தொடர்சியாக இந்த கல்குவாரி பற்றி பேசி கொண்டு வருகிறோம். இந்த பகுதியில் கிட்டதட்ட 2004-இல் தொடங்கிய கல்குவாரிகள் முழுக்க இந்த பகுதியில் உள்ள இயற்கை வளங்களையும் அழித்து வருகின்றனர். இங்கு நாங்கள் வாழ்வதற்கே மோசமான சூழ் நிலையாக இருக்கின்றது. ஏன் என்றால் காற்றில் குவாரியின் மண் துகல்கள் கலந்து வருகிறது. காற்றை சுவாசிக்க முடியாத அளவுக்கு காற்றின் தரம் உள்ளது. முன்பு எங்கள் கிராமங்களில் கறும்பு சாகுபடி மிக சிறப்பாக இருந்தது வளமாக இருந்தோம். எங்கள் இயற்கை வளங்களை அழித்தால் நாடு வளராது. இனியாவது இந்த பகுதியில் கல்குவாரி தொடங்காமல் இருப்பது நல்லது. |

| | | |
|---|---|---|
| | | இங்கு இருக்கும் அரசு அதிகாரிகளால் MP, MLA சொல்வதை மீற முடியாது. சட்டமன்ற உறுப்பினர் ஆவது இந்த கூட்டத்தில் இருக்க வேண்டும் அதுவும் இல்லை. எங்கள் கோரிக்கையாவது கூறி இருப்போம். அதற்காவது ஏற்பாடு செய்யுங்கள் நன்றி. |
| 7 | **திரு. சிவக்குமார், அருங்குன்றம் கிராமம்** | இங்கு இருக்கும் அரசு அதிகாரிகள் ஏற்கனவே இதே இடத்தில் மாசு கட்டுப்பாடு வாரியம் கூட்டத்தை நடத்தியது. அப்போதும் கூறினோம் கல்குவாரி வேண்டாம் என்று ஆனால் அனுமதி கொடுத்து எத்தனையோ உயிர் இழப்பு ஏற்படுத்தியது. நாங்கள் இங்கு உயிர்வாழ்வதா இல்லை உயிர் விடுவதா அதிகாரிகள் நீங்கள் சொல்லுங்கள். குவாரிக்கு உள்ளே மரம் நடுவது, தண்ணீர் விடுவது என்று கூறி எதுவும் செய்வதும் இல்லை. பல வருடம் நாங்கள் போராடி கொண்டு இருக்கிறோம். லாரி ஓட்டுனர்கள் சரியாக வண்டி இயக்குவதும் இல்லை தொலைபேசி பயன்படுத்தி கொண்டு லாரி இயக்குகின்றனர். கல்குவாரிகள், இங்கு நன்றாக நடைபெறும் விவசாயத்தை முற்றிலும் அழித்து சுடுகாடாக மாற்றிவிட்டது. பல முறை நான் கருத்து கணிப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு எங்கள் கருத்தை கூறியும் எதுவும் மாறவில்லை. கல்குவாரியால் இப்பகுதி 80% அழிந்துவிட்டது குவாரியால் இன்னும் 10 அல்லது 15 சதவீதம் மட்டும் தான் மீதம் உள்ளது நாங்கள் வாழ்வதா சாவதா. இயற்கை வளத்தை அழித்துவிட்டால் எப்படி நம்மால் வாழமுடியும் சுத்தமான காற்றும் கிடையாது, உணவு, குடிதண்ணீர் முழுவதும் தூசு படிகிறது. 15 ஆண்டுகளாக இந்த நிலைமை நீடித்து கொண்டு இருக்கிறது. இந்த கருத்துகளை முதலமைச்சருக்கு எடுத்து சொல்லுங்கள் இல்லை என்றால் நாங்கள் வரும் தேர்தலை புரக்கணிப்போம். இனியாவது குவாரி வராமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். |
| 8 | **திரு. ரவிச்சந்திரன்: அரும்புலியூர் கிராமம்** | பொது மக்களுக்கு கல்குவாரி பற்றிய முழுவிவரம் அடங்கிய புத்தகம் வெளியிட்டு அதனை பற்றி தெளிவுப்படுத்த வேண்டும். குவாரி லாரிகள் மிக அதிவேகத்தில் பயனிக்கின்றனர் இதனால் இறப்புக்கள் அதிகமாகிறது. நாங்கள் குவாரி வேண்டாம் என்று கூறிய பிறகும் மீண்டும் குவாரிக்கு அனுமதி கேட்கிறார்கள். உத்திரமேரூர் வட்டத்தில் எத்தனை கல்குவாரிகள் License இல்லாமல் நடக்கிறது என்று தெரியுமா. எங்களால் பொது இடங்களுக்கு, பள்ளிக்கு, மருத்துவமனைக்கோ சென்று வர முடியவில்லை. |

| | | |
|---|---|---|
| | | சரக்குந்துகளுக்கு வேககட்டுபாட்டு கருவி வைக்க வேண்டும். குவாரியால் எங்கள் ஊரில் ஏரி கால்வாய் அவ்வப்போது உடைகிறது. பாசனத்திற்கு போகும் கால்வாயில் குவாரி தண்ணீரை விட கூடாது இதன் பிறகு எந்த ஒரு புதிய கல்குவாரிக்கும் அனுமதி அளிக்ககூடாது. |
| 9 | **திரு.மணிவண்ணன்: சீதாவரம் கிராமம்** | கல்குவாரி கூட்டங்கள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் நாம் கூறும் கருத்து எந்த அரசும் ஏற்றது கிடையது அவர்கள் தவறு செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். பொது போக்குவரத்து எங்கள் ஊருக்குள் வந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. குவாரி லாரிகள் நேரத்துக்கு வர விடுவதில்லை எங்கள் வாழ்வாதாரத்திற்கு வாலாஜபாத் செல்ல வேண்டியது இருக்கிறது. கூட்டங்கள் நடந்தாலும் எங்கள் கருத்துகள் ஏற்று கொள்வதில்லை இயற்கை அழித்தது போதும் இனியாவது புதிய கல்குவாரிகள் வேண்டாம். எங்கள் ஊரில் உள்ள அனைவரும் இன்னும் சிறிது காலத்தில் நுறையீரல் பாதிப்பு அடைந்து இறப்பு ஏற்படும் அளவுக்கு காற்று மாசு மிகுதியாக உள்ளது. அதனால் குவாரி வேண்டாம். நன்றி |

இதனையடுத்து பொதுமக்கள் வேறுயாரும் பேசுவதற்கு முன்வராததினால் மாவட்ட வருவாய் அதிகாரி அவர்கள் மேடையில் பொது மக்களிடமிருந்து எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட புகார் மனுக்களை பெற்று கொண்டார். இதைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், அவர்கள் இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அதிகாரி மற்றும் பொதுமக்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல், தாக்க மப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை,
காஞ்சிபுரம் மாவட்டம்.